1970 மார்ச் 16]

THIRU K. S. KOTHANDARAMIAH : With regard to the text-books for the students of linguistic minorities, may I know what arrangements have been made in that direction?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : அதுபற்றிய குறிப்பு இல்லை. ஒருசில பள்ளிகளில் அதை தேசீயமயமாக்கி நாம் புத்தகங்கள் வெளியிடுகிற நிலை வருமா என்று தெரியவில்லை. ஆனால் ஆந்திராவிலிருந்து வெளியிடப் படுகிற அந்தப் புத்தகங்களை இங்கு நடைமுறைப்படுத்துவதன் மூலம் அந்தச் செயலை எளிதாக ஆக்கலாம். அதுபற்றிய தன்மைகளை ஆராய வேண்டும்.

பள்ளித் துணை இன்ஸ்பெக்டர்கள் அலுவலகங்கள்

* 390 வினா—திரு. சி. கோவிந்தராஜன் : மாண்புமிகு கல்வி, சுகாதார அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

நெல்லிக்குப்பத்திலிருக்க வேண்டிய பள்ளித் துணை ஆய்வாளர் அலுவலகத்தை கடலூரிலிருந்து நெல்லிக்குப்பத்திற்கு மாற்ற அரசாங்க உத்தேசித்துள்ளதா?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : இந்த விஷயம் அரசாங்க பரிசீலனையிலிருக்கிறது.

* 391வினா—புலவர் பொ. பொன்னம்பலம் : மாண்புமிகு கல்வி, சுகாதார அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருமயம் தொகுதியிலுள்ள பொன்னமராவதியில் பள்ளித்துணை ஆய்வர் (Deputy Inspector) அலுவலகம் அமைக்கும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையிலுள்ளதா?

(இ) ஆமெனில், எப்பொழுது நடைமுறைக்கு வரும்?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : (அ) இல்லை.

(இ) கேள்விக்கு இடமில்லை.

புலவர் பொ. பொன்னம்பலம் : பொன்னமராவதிப் பகுதியில் ஏறக்குறைய 87 தொடக்க, உயர்தொடக்கப் பள்ளிகள் இருப்பதனால் அங்கு ஒரு பள்ளிக்கூட துணை ஆய்வாளர் அலுவலகம் அமைக்க அரசு ஆவன செய்யுமா என்று அறிய விழைகிறேன்.

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : அதுபற்றித்தான் இப்போது இல்லை என்று விடையிறுத்தேன். ஒவ்வொரு ஊராட்சி ஒன்றியத்தையும் ஒவ்வொரு ரேஞ்சாக அமைத்து அதற்கு ஒரு டெப்டி இன்ஸ்பெக்டர் நியமிக்க வேண்டுமென்ற கருத்தை அரசு மேற்கொண்டிருக்கிறது. 344 துணை ஆய்வாளர்கள் இருந்து வருகிறார்கள். 374 ஒன்றியங்கள் இருந்து வருகின்றன. ஒவ்வொரு ஒன்றியத்திற்கும் ஒவ்வொரு துணை ஆய்வாளர் என்ற கருத்தை ஏற்றுக் கொண்டு அரசு அதை நடைமுறைப்படுத்துகிற நிலை இருந்து வருகிறது. திருமயம் ஒன்றியத்தில் 68-ம் அறிமளத்தில் 62 பள்ளிகளும் இருக்கின்றன. இதில் ஒரு ஜூனியர் டெப்டி இன்ஸ்பெக்டர் இருந்து வருகிறார். பொன்னமராவதி ஒன்றியத்தில் ஒரு துணை ஆய்வாளரை ஏற்படுத்த வேண்டுமென்ற குறிப்பு இயக்குனரிடம் அனுப்பி வைக்கப்பட்டிருக்கிறது. திருப்பத்தூர்க்